கால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. அதில், நெடுமதுரை, கூடக்கோவில், தொட்டியப்பட்டி ஆகிய கிராமங்கள் இணைக்கப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, இந்தத் திட்டத்தினால் பயனடைகின்ற பகுதிகள் அதிகம் இருப்பின், நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 374, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

374—

கால்நடை மருத்துவமனை

***18567—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அமரடக்கி கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அமரடக்கி கிராமத்திலே ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அந்தக் கிராமத்தில் கால்நடைகளின் அலகு அரசு விதிகளுக்குட்பட்டு இருக்கின்ற காரணத்தினால், அங்கே

2013 மே 2]

ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.

திரு. மு. ராஜநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்து, நித்தம், நித்தம் முத்து, முத்தாய் புதுப் புது திட்டங்களை விதி 110-ன்கீழ் தந்து, புதிய பாரதத்தைப் படைக்கப்போகும் பொன்னியின் செல்வியே, (மேசையைத் தட்டும் ஒலி) பூலோகத் தாயே, கருணைக் கொடையே, கற்பக விருட்சமே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு இந்த நல்ல நேரத்திலே எனது தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியுடன், அறந்தாங்கி தொகுதி, அமரடக்கியிலே புதிய கால்நடை மருத்துவமனை அமைக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக நன்றியைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் சேவையே, மகேசன் சேவை என்று 20 மணி நேரம் தமிழ்நாட்டு மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் எங்கள் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, விராலிகாட்டூர் பகுதியிலே ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 மே 2

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அந்தப் பகுதியை எங்கள் துறையின்மூலமாக ஆய்வு செய்து, அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு இருக்குமென்றால், நிச்சயமாக அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் எனத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

முற்பகல் 10-55

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் வல்ல எங்களுடைய குடும்ப தெய்வம், இதய தெய்வம், மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள ஆரப்பள்ளம் ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியும் எங்களுடைய துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க ஆவன செய்யும் எனத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

திரு. க. தினகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுல்தான்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட ஜல்லிப்பட்டி ஊராட்சி, கள்ளப்பாளையம் ஊராட்சிகளில் கால்நடை கிளை நிலையம்

2013 மே 2]

அமைத்துக் கொடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். போகம்பட்டி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் இருக்கின்றது. அதை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டும். ஏனெனில், இது முற்றிலுமாக விவசாயம் நிறைந்த பகுதி. அரசு விதிகளுக்குட்பட்டு இருக்கின்றது. ஆகவே, இங்கிருக்கின்ற கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கால்நடை கிளை நிலையத்தைத் தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கால்நடைகள் அலகுகள் 3,000 ஆக இருந்தால், கிளை நிலையமாக இயங்கும். அதுவே, 5,000 கால்நடைகள் என்று எண்ணிக்கை உயரும்போது, அது தரம் உயர்த்தப்படும் என்பது அரசின் விதி. அந்த அடிப்படையிலே, உறுப்பினர் சொல்கின்ற அந்தக் கிராமத்தில் இருக்கின்ற அந்தக் கால்நடை கிளை நிலையம், 5,000 கால்நடைகள் அலகுகளாக உயரும்போது, உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 375, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

375—

சார் பதிவாளர் அலுவலகம்

***34554—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூரில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*